...தகங்கள் : நான்கு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

...டர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 18 வியாழக்கிழமை (01.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 68

# ...கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அருகே நேற்றுக் கிளைமோர்

## ...பஸ் சிக்கிச் சிதறியதில் 11 பேர் பலி; ...அதிரடிப்படை–1, பொலிஸ்–6, பொதுமகன்–1

கொழும்பு, பெப்ரவரி 1

...மட்டக்களப்பு வந்தாறுமூலையில் - கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்துக்கு ...அருகே - நேற்று முற்பகல் 11.40 மணியளவில் இடம்பெற்ற ஒரு கிளைமோர் ...ண்டுத் தாக்குதலில் பஸ் ஒன்று சிக்கிச் சிதறியது. அந்தத் தாக்குதல் சம்பவத் ...ல் மொத்தம் பதினொரு பேர் பலியாகினர். அதிரடிப்படையினர் இருவரும் ...பொலிஸார் அறுவருமாக எண்மர் உயிரிழந்தனர். சிவிலியன் ஒருவரும் தாக்கு ...லில் சிக்குண்டு பலியாகினர். சில சிவிலியன்கள் உட்பட பதினைந்துபேர் ...ரை படுகாயமடைந்தனர்.

...கடமை முடிந்து விடுமுறையில் சென்ற பொலி ...ார் மற்றும் படையினர் பயணம் செய்த வாகன ...ணியொன்றை இலக்குவைத்தே இத்தாக்குதல் ...த்தப்பட்டிருக்கிறது.

...கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு அருகே வீதி ...ரம் மின்மாற்றி ஒன்றில் மறைத்துப் பொருத்தி ...கப்பட்டிருந்த சக்திவாய்ந்த கிளைமோர் ...னி ஒன்றே வெடிக்க வைக்கப்பட்டிருக்கிறது. ...அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் பயணம் ...த பஸ் ஒன்று கண்ணியில் சிக்கியது. இதனால் ...பர் உயிரிழந்ததாகவும் அவர்களில் இருவர் ...ங்காணப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. ...குண்டு வெடிப்பை அடுத்து பஸ்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அதிரடிப்படையினர், பொலிஸார், பொதுமக்கள் உட்பட காயமடைந்த சுமார் 15பேர்வரை மட்டக்களப்பு மற்றும் பொலனறுவை மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தினால் அந்தப் பிரதேசத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினரும், பொலிஸ் அதிரடிப்படையினரும் அங்கு குவிக்கப்பட்டு தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. எனினும் எவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உள்ளேயும் தேடுதல் நடத்தப்பட்டிருக்கிறது. (அ-ஐ)

---

கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவரைத் தொடர்ந்து

# நோர்வேத் தூதர் இன்று கிளிநொச்சி வருகிறார்

கிளிநொச்சி, பெப்.1

சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தடங்கல் மற்றும் சிக்கல் நிலைகள் குறித்து ஆராய்வதற்காக நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்...ர் இன்று கிளிநொச்சிக்கு வருகின் றார்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருடன் அவர் பேச்சு நடத்துவார்.

கடந்த டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி நோர்வேயின் விசேட தூதர் ஹன்சன் போவர் மேற்கொண்ட விஜயம் பயனளிக்காத நிலையில், நோர்வேத் தூதர் இன்று கிளிநொச்சிக்கு வருகின்றார்.

சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுடனும் தொடர்புகொள்ளும் வழமையான நடைமுறையிலானதே இன்றைய சந்திப்பு என்று கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் (03ஆம் பக்கம் பார்க்க)

# தொப்பிகல பகுதியிலிருந்து 2, 441பேர் இடம்பெயர்வு

கொழும்பு, பெப். 1

மட்டக்களப்பு தொப்பிகல பகுதியில் இருந்து இதுவரை 2, 441 தமிழ் ...டிக்கள் இடம்பெயர்ந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதியான சித்தாண்டிக்கு வந்துள்ளனர். - என்று இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

வாகரையில் இருந்து தப்பிச்சென்ற புலிகள் தொப்பிகல பகுதியில் பதுங்கியுள்ளனர். அங்கு அவர்கள் முகாம்களையும் பதுங்குகுழிகளையும் அமைத்து வருகின்றனர்.

இந்த வேலைகளுக்கு புலிகள் மக்களைப் பலவந்த மாகப் பிடித்துள்ளனர். பலர் அவர்களின் பிடியில் இருந்து தப்பி வந்துள்ளனர்.

இதுவரை 2, 441 பொதுமக்கள் தொப்பிகல (03ஆம் பக்கம் பார்க்க)

---

# ...யாழ்ப்பாணத்துக்குச் சீராக உணவு அனுப்புவதாகக் கூறுகின்றது அரசு

## ...மாதாந்தம் 12 ஆயிரம் தொன் போய்ச் சேர்கின்றது - அமைச்சர்

கொழும்பு, பெப். 1

...யாழ்ப்பாணத்துக்கு ஒகஸ்ட் மாதம் ...ம் திகதி முதல் இதுவரை 68 ஆயிரம் ...மெற்றிக்தொன் உணவுப் பொருள்கள் ...அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று ...அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல நேற்று ...த்திய செய்தியாளர் மாநாட்டில் கூறி...ர்.

...மாதாந்தம் 12 ஆயிரம் மெற்றிக்தொன் ...உணவுப் பொருள்கள் அனுப்பிவைக்கப்...டுள்ளன என்றும் ஏ-9 பாதை திறந்திருந்த ...மயத்தில் அங்கு சென்றடைந்த பொருள் ...ளின் அளவைவிடவும் இது அதிகம் என் ...ம் அவர் கூறினார்.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் முதல் யாழ்ப்பாணத்தில் உணவுத் தேவை குறைவில்லாமல் நிவர்த்திசெய்யப்பட்டு வருகின்றது. அங்கு பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக புலிகள்தான் கதை கட்டியுள்ளனர்.

இதுவரை 68 ஆயிரம் மெற்றிக்தொன் உணவுப்பொருள்கள் அங்கு கடல்மார்க்கமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஏ-9 பாதையின் ஊடாக அனுப்புவதற்கும் நாம் தயாராகவுள்ளோம்.

ஆனால், புலிகள் அவர்களின் பகுதியின் ஊடாகச் அப்பொருள்களைக் கொண்டு செல்ல எமக்கு இன்னும் அனுமதி வழங்கவில்லை.

வாகரையில் தாக்குதல் இடம்பெற்ற சமயம் நூறு தொன் உணவுப் பொருள்களை அங்கு அனுப்பிவைத்திருந்தோம். அப்பொருள்கள் சென்றடைந்து ஓரிரு நாள்களின் பின்னர் அங்கு உணவுப் பொருள்களுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது என்று பல பொது அமைப்புகள் கூறின.

ஆனால், அங்கு சென்ற அரிசியை மூடை மூடையாகக் கட்டி அதனைக்கொண்டு புலிகள் பதுங்குழி அமைந்திருந்தனர் என்பது வாகரையைப் படையினர் கைப்பற்றிய பின்புதான் தெரியவந்தது. இப்படியான தில்லுமுல்லு வேலைதான் வடக்கிலும் இடம்பெறுகின்றன. அதனால்தான் அங்கு பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது - என்று ரம்புக்வெல மேலும் தெரிவித்தார். (ஐ)

# ஹெல உறுமயக் கட்சி சார்பில் சம்பிக ரணவக்க அமைச்சராகிறார்

கொழும்பு, பெப். 1

ஜாதிக ஹெல உறுமய அரசுடன் இணைந்து அமைச்சுப் பொறுப்பொன்றை ஏற்கவுள்ளதாக அதன் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அறிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவின் ஆலோசகர் சம்பிக ரணவக்க சுற்றாடல் அமைச்சராக விரைவில் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார். சம்பிக ரணவக்க நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு ஏது வாக ஜாதிக ஹெல உறுமயவை... சேர்ந்த ஓமல்பே சோபித தேரர் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துள்ளார். இவரின் இடத்துக்கு சம்பிக ரணவக்க நியமிக்கப்படுவார். எதிர்வரும் 6ஆம் திகதி இவர் நாடாளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுக்கொள்வார்.

தேசத்தைப் பாதுகாக்கும் தேசிய இ... கத்தின் தலைவரான சம்பிக ரணவக்க ... வேயின் சமாதான முயற்சிகளைக் கடுமை யாக எதிர்த்து வருபவர் ஆவார் (ஐ)

---

# ...புதிய வெளிவிவகார அமைச்சர் இந்தியப் பிரதமருடன் சந்திப்பு

கொழும்பு, பெப்.01

...தனது முதலாவது உத்தியோகபூர்வ ...ஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்றி...ருக்கும் வெளிவிவகார அமைச்சர் ரோஹித ...கொல்லாகம நேற்று இந்தியப் பிரதமர் ...மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசினார்.

...சுமார் 30 நிமிடங்கள் வரை நீடித்த இந் ...பேச்சின்போது இலங்கையின் தற் ...பாதைய அரசியல் மற்றும் சமகால விட...ங்கள் குறித்தே அதிக அளவில் விவாதிக்கப்பட்டது என்று இந்திய வெளிவுறவுத் துறை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

(03 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அதிகாரிகளை ஆஜராகப் பணிப்பு

கொழும்பு, பெப்.01

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கொழும்பு அலுவலகத்தில் பணியாற்றிய அதன் தலைவர், சிரேஷ்ட கணக்காளர், நிறைவேற்று இயக்குநர் ஆகிய மூவரையும் எதிர்வரும் ஏழாம் திகதி கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு பிரதம நீதிவான் குசல சரோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக் கணக்குகள், நீதிமன்றம் மற்றும் மத்திய வங்கி ஆகியவற்றின் உத்தரவுக்கு அமைய முடக்கப்பட்டிருக்கும் நிலையில் அவ் விடயம் நேற்றுமுன்தினம் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் மீளவும் எடுத்துக்

(03 ஆம் பக்கம் பார்க்க)

# ஐந்து ரூபா முத்திரைகளுக்கு குடாநாட்டில் தட்டுப்பாடு

## திங்களன்று வரும் என எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம், பெப்.01

குடாநாட்டில் ஐந்து ரூபா பெறுமதியான முத்திரைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்ற போதிலும், அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்ட முத்திரைத் தொகுதியில் ஐந்து ரூபா பெறுமதியான முத்திரைகள் அடங்கியிருக்கவில்லை.

குடாநாட்டில் உள்ள அனைத்துத் தபாலகங்களுக்கும் தனித் தனிப் பொதிகளில் முத்திரைகள் அண்மையில் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டன.

இதில் 4ரூபா 50சதம், 10 ரூபா, 20 ரூபா, 50ரூபா, 100 ரூபா பெறுமதியான முத்திரைகள் மட்டுமே அடங்கியிருந்தன. யாழ்ப்பாணத்தில் ஐந்து ரூபா பெறுமதியான முத்திரைகளே அதிகமாகத் தேவைப்படுகின்ற போதும் அவை இந்தத் தொகுதியில் சிறிதளவும் எடுத்து வரப்படவில்லை என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.பிரதம தபாலகத்திற்கு 6 லட்சம் ...பா பெறுமதியான முத்திரைகள் வந்து சேர்ந்ததாகவும், குடாநாட்டில் உள்ள ஏனைய 33 தபாலகங்களுக்கும் தனித் தனிப் பொதிகளில் முத்திரைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(03 ஆம் பக்கம் பார்க்க)

# ...சூசையைக் கைதுசெய்ய கோருகிறது 'இன்ரபோல்'

கொழும்பு, பெப். 1

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை இலங்கையைவிட்டு வெளியேறி வேறு நாடுகளுக்குச் சென்றால் அவரைக் கைது செய்து நாடுகடத்துவதற்கான உத்தரவை ...ர்வதேச பொலிஸான 'இன்ரபோல்' சர்வதேச நாடுகளுக்கு விடுத்துள்ளது.

இதன்படி 186 நாடுகள் இவரைக் கைதுசெய்து நாடுகடத்தும் உத்தரவைப் பெற்றுள்ளன. 2006 ஜூன் மாதம் புலிகளால் மேல் மாகாண கரையோரத்திற்கு

(03 ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலை அனுமதி வெட்டுப்புள்ளி 19ஆம் திகதி வெளியாகும்

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விவரம் எதிர்வரும் 19ஆம் திகதி வெளியாகும் என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நேற்று அறிவித்தது.

அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் 18ஆயிரத்து 30மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

நாட்டில் உள்ள பதினான்கு பல்கலைக் கழகங்களிலும் 17ஆயிரத்து 630மாணவர்களை சகல கற்கை நெறிகளுக்காகவும் இணைத்துக் கொள்வதென முன்னர் உத்தேசிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடுகள் வாடகைக்கு

1. சாவகச்சேரி இல.16, கண்டி வீதியில் 7 அறைகள், 2ஹோல், சமையல் அறை, சாப்பாட்டு அறை, குளிக்கும் அறை ஆகிய சகல வசதியுடன் உள்ள வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்.

2. மீசாலை மேற்கு, டச்சுவீதி, விக்னேஸ்வர மகா வித்தியாலயத்திற்கு அருகில் தொலைத் தொடர்புடன் சகலவசதியும் உள்ள வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: லயன் சி.சற்குணநாதன்
தொ.பே.:060 221 2969, 060 221 3346, 0776660199.



## விற்பனைக்கு

கண்டி, ஹற்றன் ஆகிய பகுதிகளில் வீடு காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
S.S. குமார்
தொ.பே.:
0776938823


## திறப்பு விழா

வதிரி புலவரோடை ஸ்ரீ முருகன் பாலர் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பண உதவியுடன் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டது.


**A\L தமிழ் பிரத்தியேகம்**

இன்று புதிய பிரிவுகள் ஆரம்பம்

A\L 2009 - Tue., Thu. 2.30
A\L 2007& Day - Tue., Thu. 3.30
A\L 2008 - Tue., Thu. 4.30

தமிழ் நாக.தமிழிந்திரன்

ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

புதிய சக்தி கல்வி நிலையம்
கல்வியங்காடு.




## தென்மராட்சிக் கலைமன்றம் சாவகச்சேரி

### கலாசார மண்டபத் திறப்பு விழா 2007.02.01

தென்மராட்சி மக்களின் நீண்ட நாள் கனவு நனவாகி சாவகச்சேரியில் புதுப் பொலிவுடன் அமையப்பெற்று இன்று (2007.02.01) வியாழக்கிழமை மங்கள கரமான சுபநேரத்தில் திறந்துவைக்கப்படவுள்ள இந்த மண்டபம் தனது மக்கள் பணியில் வளர்வுற்று சிறப்புற்று மேலோங்க இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

திருமண வைபவம், பூப்புனித நீராட்டுவிழா, நடன அரங்கேற்றம் மற்றும் கலை, கலாசார நிகழ்வு வைபவங்களுக்கு இந்த மண்டபத்தை - தென்மராட்சிக் கலைமன்ற நிர்வாக சபையுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்பதை அறியத்தருகின்றோம்.

நிர்வாகசபை,
தென்மராட்சிக் கலைமன்றம்,
சாவகச்சேரி.

*அனுசரணையாளர்கள்:*
றூபா வர்த்தக நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
ஸ்ரீ விக்கினேஸ்வரா களஞ்சியம், கண்டிவீதி, சாவகச்சேரி.
(57649)

---

பாசநினைவுகளுடன் பதினோராம் ஆண்டு நினைவலைகள் — ஈரவிழிகளுடன் முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **தம்பிப்பிள்ளை சின்னராஜா**
(ஸ்தாபகர், ராஜா கிறீம்ஹவுஸ்)

திருமதி **சின்னராஜா சரஸ்வதி**

| | | |
|---|---|---|
| 13-07-1922 | மலர்வு | 07-11-1927 |
| 01-02-1996 | உதிர்வு | 25-01-2006 |

அன்பையும் பண்பையும் ஊட்டி
இன்பமாய் எமை வாழவைத்த தெய்வங்களே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

654/4, தலையாழி லேன்,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
- குடும்பத்தினர்.
(57637)

---

## தவறிவிட்டது

மார்க்கண்டு மோகன கிருஸ்ணர் ஆகிய எனது தேசிய அ. அட்டை (இல. 861122000V) 26.12.2006 அன்று வேலணைக்கும் - பண்ணைப் பாலத்திற்கும் இடையே தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 11/8, பண்டாரக்குள மேற்கு ஒழுங்கை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்புமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.

---

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

*தோற்றம்* 10 - 05 - 1930



*மறைவு* 28 - 01 - 2002

**திருமதி தம்பிஐயா நாகம்மா**
(பரராசசிங்கம்)

**ஆண்டுகள் ஐந்து சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டுப் பிரியாது.**

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*
- குடும்பத்தினர்.
(57658)

---

## துயர்பகிர்கின்றோம்

எமது ஆருயிர் நண்பி
செல்வி தி.நிருபாவின்
(நூலக விஞ்ஞான ஆசிரியை) அன்புத்தந்தை
**தியாகராஜா**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நண்பர்கள்
கோப்பாய்.
(57650)

---

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.இந்துவின் முன்னாள் ஆசிரியரும்,
கல்லூரி அதிபர் **வி.கணேசராசா**
அவர்களின் அன்பு மாமனும் மெய்கண்ட
ஆதீன முதல்வருமாகிய ஞானப்பிரகாசசிவம்,
சித்தாந்த கலாநிதி
**வே. கணபதிப்பிள்ளை**
அவர்கள் சிவபதமெய்தியுள்ளமை குறித்து அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.இந்து பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்.
(57646)

---

## 21ஆவது பிறந்தநாள் நினைவலைகள்



அமரர் **விஜேந்திரன் பிரதீபன்**
*(யா/ மத்திய கல்லூரி மாணவன்)*

கண்ணில் மணி போன்றவனே
கண்ணயர்ந்து போனாலும் கலையவில்லை
உன்னுருவம்
தோளோடு தொங்கியவனை தொலைத்து
விட்டேனே
திங்களாய் உன்முகம் எங்கும் தெரியுதே
உன்னை இன்று வாழ்த்தும் நாவு
உன்னை என்றும் பார்க்கும் கண்கள்
உன்னை என்றும் அணைத்த கைகள்
இன்று செயலற்றுக் கிடக்கின்றனவே

*யாழ்ப்பாணம்.*
- அன்ரி.
(57660)

---

## தவறிவிட்டது

திருநாதன் இராஜேஸ்வரி ஆகிய எனது தேசிய அ. அட்டை (இல. 627470959V), விசேட அடையாள அட்டை (0901030074) என்பன காரைநகரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 380, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் அல்லது தொலைபேசி இல. 2609 உடன் தொடர்பு கொள்ளவும்.

---

## மரண அறிவித்தல்



*திருமதி*
### பூரணம் பொன்னையா.

கொக்குவில் கிழக்கு, வளவத்தையைப் பிறப்பிடமாகவும் கனடா ஸ்காபறோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் பொன்னையா 17-01-2007 புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் - அம்மாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னையா - நாகம்மா தம்பதியரின் அருமை மருமகளும் காலஞ் சென்ற சிறாப்பர் பொன்னையாவின் அன்பு மனைவியும் ஜெயரத் தினம் (கனடா), ஜெகதீஸ்வரன் (டென்மார்க்), றஜனி (மனோன், கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் தையல்நாயகி (கனடா), தவம் (டென்மார்க்), சற்குணேந்திரராசா (கனடா) ஆகியோரின் அருமை மாமியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், தம்பி ராசா, சின்னத்துரை, பாலசிங்கம், மாணிக்கவாசகர் (மலேசியா), இராசேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர் களான சின்னத்துரை, பொன்னப்பா, அன்னம்மா, கனகம்மா, இரத் தினம்மா முத்தையா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜனந்தா, ஜெயந்தா, ஜனனி, ஜீவன், ஜெகன், ஜனோ, தனஞ்சன், கஜனா, கவிதா, வர்ணா, காருண்யா, இந்திரஜித், இளஞ்செழியன், ஹரி, சுரேக்கா, வசந்தி, கௌசி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அமரன், அர்யுன், உமையா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20-01-2007 சனிக்கிழமை கனடாவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளவத்தை லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
மாதவர்.
(57578)

---

## நான்காவது ஆண்டு நினைவலைகள்



### அமரர் தம்பு சிவபாக்கியன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12.01.1922 | 18.01.2003 |

**திதி: 01-02-2007**

பாசமுடன் எம்மை பக்குவமாய் வளர்த்து
பல புத்திமதிகள் எந்நேரமும் கூறி
கண்ணும் கருத்துமாய் எங்களை வாழவைத்த
எங்கள் அன்புத் தெய்வமே ஐயா!
எந்நாளும் உங்களை எண்ணி ஏங்குகிறோம்
எங்கள் ஐயா எத்தனை உறவுகள் வந்தாலும்
எமக்கு ஐயா என்றழைக்க யாருமில்லையே
எங்களைக் காத்திரமாய் காத்திட
இன்னுமொரு முறை வாருங்கோ ஐயா!

198, சென்.பெனடிக் றோட்,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.
- குடும்பத்தினர்.
(57563)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 3837

# அரசியல் குத்துக்கரணங்களால் அரசுக்கு நன்மை; நாட்டுக்கல்ல!

அதிகாரப் பதவிகளுக்காகத் தாங்கள் அடிக்கும் 'அரசியல் அந்தர் பல்டி'களுக்கு அரசியல்வாதிகள் கூறும் காரணங்கள் வேடிக்கையானவை.

அமைச்சர் பதவிகளுக்காக எம். பிக்கள் அணி மாறுவது சுதந்திர இலங்கையின் சரித்திரத்தில் ஒன்றும் புதிய விடயமல்ல. ஆனால், எப்போதாவது ஓரிருவர், அங்கொருவர் இங்கொருவராக அணி மாறுவதே கடந்த காலங்களில் இடம்பெற்று வந்தது. ஆனால் இப்போது அது கொத்துக் கொத்தாக - கூட்டம் கூட்டமாக - குத்துக்கரணம் அடிக்கும் அரசியல் (அ)நாகரிகமாகி விட்டமை தான் கேவல நிலைமை.

''இனப்பிரச்சினையால் சீரழிந்திருக்கும் நாட்டுக்கு அமைதி வழியில் - சமாதானமுறையில் - ஒரு தீர்வைக்காணும் ஜனாதிபதியின் முயற்சிக்கு வலுவூட்டவே - அவரின் கையைப் பலப்படுத்தவே - அரசுடன் இணைந்தோம்.'' - என்றோ, அல்லது -

''அரசுக்குள் இருந்துகொண்டு அரசையும் ஜனாதிபதியையும் அமைதி வழியில் தூண்டவே உள்நுழைந்தோம்'' - என்றோ 'குத்துக்கரண' அரசியல்வாதிகள் எல்லோரும் கூறுகின்றனர்.

அண்மையில் அரசுடன் இணைந்து கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் தொண்டமானாகட்டும், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரனாகட்டும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமாகட்டும் அல்லது பெரும் அணியாகக் கட்சி தாவிய ஐ. தே. க். அதிருப்திக்குழுவின் தலைவர் கரு ஜெயசூரியாவாகட்டும் எல்லோரும் இந்தப் பல்லவியைத்தான் பாடுவார்கள்; பாடுகின்றார்கள்.

ஆனால் அமைதி முயற்சிகளில் ஈடுபடவேண்டிய அரசுத் தலைமையை அவ்வழியில் வழிநடத்தவே அரசில் இணைந்தோம் என்று அவர்கள் கூறினாலும் - அவர்கள் கருதினாலும் - யதார்த்தத்தில் அது முற்றிலும் மாறானது என்பதே உண்மை.

இராணுவத் தீர்வு முயற்சியில் முனைப்பாகவும் தீவிரமாகவும் இருக்கும் அரசுத் தலைமையின் நாடாளுமன்றப் பலத்தை வலுவடைய வைத்ததன் மூலம், அந்தத் திசையில் அரசு மேலும் முறுக்கோடும், உறுதியோடும், விறைப்போடும் முன்னேறவே இந்தக் குத்துக்கரண அரசியல்வாதிகள் வழி செய்திருக்கின்றார்கள் என்பதே நிஜம்.

அமைதி வழித்தீர்வுக்கும், ஈழத் தமிழர்களின் நலனுக்கும் குரல் கொடுப்போம் என்று சூளுரைத்து அரசுப் பக்கம் தாவிய தொண்டமான் குழுவினரும், சந்திரசேகரன் அன்ட் கோவும் அரசுடன் இணைந்த பின்னர், தமிழர்களுக்கு எதிரான அரசின் இராணுவத் தீர்வுப் போக்கை - படை நடவடிக்கைத் தீவிரத்தை - தடுக்க என்ன செய்தார்கள்? அவர்களால் அது விடயத்தில் ஆக்கபூர்வமாக ஏதேனும் செய்ய முடிந்ததா? அவர்கள் அரசுக்கு காவடி தூக்கத் தொடங்கிய பின்னர்தானே வாகரையை ஆக்கிரமிக்கும் பெரும் இராணுவ நடவடிக்கையை அரசுப்படைகள் அரங்கேற்றி முடித்திருக்கின்றன?

அந்த அணி மாற்றத்தினால் தமிழர்களைப் பொறுத்தவரை கிடைத்த நன்மை ஒன்றுதான். அது - தென்னிலங்கையில் கேட்டுக்கேள்வியின்றிக் கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவலில் சிறைவைக்கப்படும் அப்பாவித் தமிழர்களுக்காகவும், கடத்தப்பட்டு பணயம் வைக்கப்படும் அல்லது மர்மமாகக் காணாமற் போகும் தமிழர்களுக்காகக் குரல் எழுப்பவும் ஒரு பிரதி அமைச்சர் அரசில் இருக்கிறார் என்று கூறும் அளவுக்கு நிலைமை முன்னேற்றம் கண்டது: அவ்வளவே.

இவ்வாறு கெடுபிடிக்கு உள்ளாகும் தமிழர்களுக்காக இராதாகிருஷ்ணன் எம். பி., பிரதி அமைச்சராக இருந்துகொண்டு வெறுமனே குரல் எழுப்ப முடிந்ததே தவிர, தமிழர்களுக்கு எதிரான கெடுபிடிகளைத் தடுத்து நிறுத்தவோ, அந்தப் பேரினவாதப் போக்கிலிருந்து அரச நிர்வாகத்தைத் திருத்தி நல்வழிப்படுத்தவோ, இந்த இக்கட்டிலிருந்து தமிழர்களை விடுவிக்கவோ முடியவில்லை. அது இயலாத விடயம் என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஆகவே இராணுவ முனைப்பில் உறுதியாக நிற்கும் அரசுத் தலைமையின் நாடாளுமன்றப் பலத்தை மேலும் வலுப்படுத்தியதன் மூலம், ஈழத் தமிழர்களுக்கு எதிரான போர்த்தீவிரப் போக்கை மேலும் உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள் இந்த 'அந்தர் பல்டி' அசகாயச் சூரர்கள்.

பேரினவாதச் சிந்தனைப் போக்கில் இந்தக் குத்துக்கரணக் குளறுபடியை நோக்கினால் அது சிங்கள தேசத்துக்கு முழு அளவில் நன்மைபயக்கும் நடவடிக்கைதான். அதில் சந்தேகமில்லை.

ஆனால், மறுபுறத்தில் நீதி, நியாயம், கௌரவ வாழ்வு, அடிப்படை உரிமைகள், சுதந்திரம் போன்றவற்றுக்காகப் போராடி, அதற்காகத் தாங்கள் உயிர், உடைமை, தாயக வாழ்வு போன்றவற்றைத் தொலைத்து, அவலத்துக்குள் சிக்குண்டு கிடக்கும் ஈழத் தமிழர்களுக்கு, அவர்கள் எதற்காகப் போராடுகின்றார்களோ அவை மறுக்கப்படுவதை மேலும் ஊக்குவிப்பனவாக, பதவிகளை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் இந்த அரசியல் குத்துக்கரணங்கள் அமைந்துள்ளன என்பதும் மறுக்கப்படமுடியாத உண்மை.

இராணுவத் தீர்வு முனைப்பை விடுத்து, அரசியல் தீர்வுக்கான சமாதானப் பேச்சுகள் குறித்து அதிகம் சிரத்தை காட்டப்படவேண்டும் என்று தாம் பதவிப் பிச்சை பெற்றிருக்கும் அரசின் தலைமையைப் பார்த்து, நேருக்குநேர் தெளிவாகவும் உறுதியாகவும் கூறமுடியாத அரசியல்வாதிகளினால் - அதிகாரத்துக்கும் பதவிக்குமாக அடிமைகளாகியிருக்கும் தந்திரக்காரர்களால் - இலங்கைத் தீவுக்கு நன்மை ஏதும் கிட்டாது - மேலும் அழிவைத் தவிர.

# குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்குமான வங்கிச்சேவைகள் வழமை நிலைக்குத் திரும்பின

யாழ்ப்பாணம்,பெப்.1

குடாநாட்டில் பெரும்பாலான தொலைபேசி இணைப்புகள் தொடர்ந்தும் செயலிழந்துள்ள போதும், வங்கிகளின் பணப் பரிமாற்ற நடவடிக்கைகளில் தடங்கல் எதுவும் இல்லையென வங்கி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இலங்கை வங்கியின் செயற்பாடுகள் பதிக்கப்பட்டிருந்தன. எனினும், ரெலிகொம் நிறுவனம் ஊடான வங்கிகளுக்கான சேவைகள் சீராக்கப்பட்டதையடுத்து, வழமையான சேவைகள் நேற்று முதல் இடம்பெறுகின்றன. கிளைகள் ஊடான பணப்பரிமாற்ற வேலைகள் நேற்று வழமைக்குத் திரும்பின - என்று அந்த வங்கியின் உயர் அதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார்.

செலான், எச்.என்.பி., மக்கள் வங்கி ஆகியவற்றின் தன்னியக்க இயந்திரம் மூலமான சேவைகளும் நேற்றுத் தொடக்கம் வழமை போல இடம்பெறுவதாக அந்த வங்கிகளின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தன்னியக்க இயந்திரம் மூலம் பணம் பெறும் சேவை உட்பட அனைத்துச் சேவைகளும் எவ்வித தடங்கலுமின்றி இடம்பெற்றுவருவதாக கொமர்ஷல் வங்கியின் உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ். கொமர்சல் வங்கியிலும் அதன் இரண்டாவது கிளையிலும் மற்றும் சுன்னாகம், நெல்லியடிக் கிளைகளிலும் கடந்த திங்கட்கிழமை தொடக்கமே வழமை போல் சேவைகள் இடம்பெறுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

வெளிமாவட்டங்களுக்கும் குடாநாட்டுக்குமிடையிலான வங்கிச் சேவைகளும் வழமையாக இடம்பெறுகின்றன என்றும் - தொலைத்தொடர்பு சேவைகளில் ஏற்பட்ட தடங்கல் சீராக்கப்பட்டுள்ளன என்றும் - வங்கியாளர் சங்கள் செயலாளர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார். (1)

# இணுவிலில் ஆயுதங்களுடன் கைதான மூவர் நீதிமன்றுக்கு

யாழ்ப்பாணம்,பெப்.1

இணுவில் பகுதியில் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்ட

**மூவர் கைது என படைத்தரப்பு அறிவிப்பு**

கடந்த செவ்வாய்க்கிழமை படையினர் மேற்கொண்ட தேடுதல் சுற்றிவளைப்பின் போது விடுதலைப்புலி உறுப்பினர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மேற்படி சுற்றிவளைப்பின் போது இணுவில், வல்வெட்டித்துறை, ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளைச்சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டனர் என்றும் -

கைக்குண்டு, சயனைட், 23 ஆயிரம் ரூபா ஆகியவற்றுடன் கைதுசெய்யப்பட்ட இவர்கள் சுன்னாகம் பொலீசில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் - தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

மூவர் மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் படையினரால் மூவர் கைதுசெய்யப்பட்டனர் என்றும் -

அவர்களிடமிருந்து மூன்று கிரனேட்டுக்களும், 2 சயனைட்டுக்களும் 22ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளன என்றும் - சுன்னாகம் பொலிஸார் மல்லாகம் நீதிவானிடம் தெரிவித்தனர்.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் அவர்களிடம் மேலும் விசாரணை செய்ய அனுமதிக்கவேண்டும் என்று பொலிஸார் நீதிவானிடம் கோரினர். நீதிவான் அதற்கு அனுமதி வழங்கினார். (அ-1)

## சூசையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியே மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி சூசையைக் கைதுசெய்வதற்கான உத்தரவைப் பிறப்பித்தனர். அதற்கு உதவும் முகமாக இப்போது இன்ரபோல் பொலிஸாரும் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளனர். (த)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பு இடம்பெற்றவேளை பிரதமர் மன்மோகன் சிங்குடன் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், வெளியுறவுத்துறைச் செயலர் சிவ்சங்கர் மேனன் ஆகியோரும் கலந்துகொண்டனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்திற்கமைய வெளி விவகார அமைச்சராக றோஹித போகொல்லாகம பதவி யேற்றார். அதன்பின் அவர் மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

## தொப்பிகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் இருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு படகுகள் மூலம் வந்துள்ளனர். இவர்களுக்குரிய அத்தியாவசிய தேவைகளைப் படையினர் செய்து வருகின்றனர். - என்றும் இராணுவப் பேச்சாளர் அங்கு தெரிவித்தார். (ஐ - 7)

**நாளை**

தை - 19
வெள்ளிக்கிழமை
02.02.2007
திதி: பூரணை
நண்பகல் : 12.00
நட்சத்திரம் : பூசம்
காலை: 07.30
சுபநேரம் : 06.36 - 08.06
ராகுகாலம் : 11.06 - 12.36

# மல்லாகத்தில் ஊரடங்கை மீறிய 16 பேர் படையினரால் கைது

யாழ்ப்பாணம்,பெப்.1

மல்லாகம், குளமன்கால் பகுதியில் ஊரடங்கை மீறியதாகக் கைதுசெய்யப்பட்ட 16 பேர் மல்லாகம் நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களைப் படையினர் கைதுசெய்தனர். பின்னர் தெல்லிப்பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

சம்பந்தப்பட்டவர்களை எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதேவேளை-

பண்டத்தரிப்பு, பிரான்பற்றுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு ஊரடங்கை மீறியதாகக் கைதுசெய்யப்பட்ட மற்றொருவரும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## தமிழர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்பட்டது.

அப்போது அங்கு ஆஜரான குற்றப் புலனாய்வுப் பொலிஸார் விடுத்த வேண்டுகோளை அடுத்து தமிழர் புனர்வாழ்வுக் கழக அதிகாரிகளை நீதிமன்றில் ஆஜராகப் பணிக்கும் உத்தரவுகளை நீதிவான் விடுத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு நிதி உதவிகள் சட்ட விரோதமான முறையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைக்கு திருப்பப்பட்டன என மத்திய வங்கியின் புலனாய்வுப்பிரிவு செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

## ஐந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து ரூபா பெறுமதியான முத்திரைகள் அனுப்பிவைக்கப்படாததை அடுத்து குடாநாட்டில் அவற்றுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதேவேளை-

இலங்கை முழுவதும் ஐந்து ரூபா முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. விமானம் மூலம் இந்த முத்திரைகள் கொழும்புக்கு நேற்று வந்து சேர்ந்துள்ளன. அவற்றில் ஒரு தொகுதி யாழ்ப்பாணத்திற்கு எதிர்வரும் திங்கட்கிழமை எடுத்து வர ஏற்பாடாகியுள்ளது என்று பிரதித் தபால் மா அதிபர் எம்.குமரகுரு நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார். (அ-1-8)

## நோர்வேத் தூதர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொர்பினுர் ஓமர்சன் தெரிவித்தார்.

இதற்கிடையில் -

நேற்று கிளிநொச்சி வந்த கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் லார் ஜோகான் சொல்பேர்க் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தலைமையிலான குழுவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கண்காணிப்புக் குழுவினரின் பாதுகாப்புக்குத் தங்கள் தரப்பில் இருந்து எதுவித குந்தகமும் ஏற்படாது என்றும் அவர்களுக்கு வேண்டிய ஒத்துழைப்பைத் தமது தரப்பு வழங்கும் என்றும் - எஸ். புலித்தேவன் உறுதியளித்ததாக அசோசியேட்டட் பிறஸ் செய்தி ஏஜென்சி தெரிவித்தது.

அரசாங்கமும் இதே வாக்குறுதிகளைக் கண்காணிப்புக் குழுவுக்கு ஏற்கனவே வழங்கியிருப்பதாகச் செய்தி ஏஜென்சி குறிப்பிட்டுள்ளது. (அ-1)

## பூரணை தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.1

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதந்தோறும் பூரணை தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதலும் பன்னிரு திருமுறைப் பாராயணமும் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

தட்டாதெருச் சந்தியில் உள்ள ஸ்ரீ முனீஸ்வரன் ஆலயத்தில் காலை 8 மணிமுதல் இந்நிகழ்வு இடம்பெறும்.

* * *

தாவடி, கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமத்தினர் இன்று காலை 9 மணிக்கு சேவாச்சிரமம் இயங்கும் தாவடி இ.த.க. பாடசாலையின் பழைய மண்டபத்தில் பூரணை விழாவை நடத்தவுள்ளனர்.

'அன்பே சிவம்' என்னும் தலைப்பில் ஆசிரியை திருமதி ஈஸ்வரி தர்மலிங்கம் உரையாற்றவுள்ளார்.

* * *

கொக்குவில் மேற்கு பாக்யா இசைப்பயிலகம் நடத்தும் பூரணை தினச் சொற்பொழிவு இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது. பா.குகப்பிரசாதன் ஆன்மீக உரை நிகழ்த்துவார். (1-202)

## தைப் பூசத் திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், பெப்.01

தைப் பூசத் தினமான இன்று குடாநாட்டில் உள்ள முருகன் ஆலயங்களில் விசேட பூசைகள், திருவிழக்கள் இடம்பெறுகின்றன. ஏனைய ஆலயங்களிலும் திருவிழாக்கள், பூசைகள் இன்று நடைபெறுகின்றன.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயம், இணுவில் கந்தசுவாமி ஆலயம், நயினை நாகபூசணி அம்மன் ஆலயம், சாவகச்சேரி அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவனநாத சிவன் ஆலயம், வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயம், யாழ்.கோட்டை முனீஸ்வரர் ஆலயம் உட்பட குடாநாட்டிலுள்ள முருகன் ஆலயத்தில் தைப் பூச உற்சவ நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

## குடாநாட்டின் குட்டிச் செய்திகள் யாழ்ப்பாணம்

### ஆனைக்கோட்டை வாசியை கொழும்பில் காணவில்லையாம்

யாழ்ப்பாணம், பெப்.01

குடாநாட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை கொழும்பில் காணவில்லை என்று யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட செல்வராசா டினேஷ் ஆனந் (வயது 24) என்பவரை திங்கட்கிழமை கொழும்பில் காணவில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப நபர் கடந்த ஜூலை மாதம் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக கொழும்பு சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (1-4)

### மீள் குடியமர்வு விசாரணைகள்

யாழ்ப்பாணம், பெப்.01

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவில் வசிப்பவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறுவது தொடர்பான நேர்முக விசாரணைகள் நாளை ஆரம்பமாகவுள்ளன.

சங்கானை பிரதேச செயலகத்தில் இந்த விசாரணைகள் 9ஆம் திகதி வரை நடைபெறும். இது தொடர்பான கடிதங்கள் கிராம அலுவலர்கள் ஊடாக சம்பந்தப்பட்ட மக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாவும்-

கடிதங்கள் கிடைக்காதவர்கள் தற்போது தாம் வசிக்கும் கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு விசாரணைக்கு சமூகமளிக்கலாம் என்றும்-வலி.மேற்கு பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (1-202)

* * *

வலி.வடக்குத் தெல்லிப்பளை பிரதேச அதியுயர் பாதுகாப்புப் பகுதியில் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக் குடியமர விரும்பும் தென்மராட்சிப் பிரதேசத்தில் தங்கியுள்ள வலி.வடக்குப் பிரதேச மக்களுக்கான விசாரணைகள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடத்தப்படவுள்ளன.

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் தங்கியுள்ள குடும்பங்களுக்கான விசாரணை நாளை 2ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடத்தப்படவுள்ளன. (1)

### கலாசார மண்டப திறப்பு விழா இன்று

தென்மராட்சி, பெப்.01

தென்மராட்சி கலைமன்றத்தின் கலாசார மண்டபத்திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் மண்டபத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைப்பார்.

இந்நிகழ்வில் தென்ராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், சாவகச்சேரி மாவட்ட நீதிவான் அ.பிரேம்சங்கர், யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் க.கேதீஸ்வரன், தென்மராட்சி முன்னாள் உதவி அரச அதிபர் க.துரைராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வர். (அ-1)

### நேர்முகப் பரீட்சைக்கு உடன் சமுகமளிக்குக

யாழ்ப்பாணம், பெப்.01

மருந்து வழங்குநர், மருத்துவ ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர், பௌதீகவியலாளர், எக்ஸ்ரே ஒளிப்பதிவாளர், தொழில்சார் குணப்படுத்துனர்கள் ஆகிய பயிற்சி நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டு இதுவரை நேர்முகப் பரீட்சைக்கு தோற்றாதவர்களை உடன் சமுகமளிக்குமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

பயிற்சி நெறிகள் எதிர்வரும் 5ஆம் திகதி கொழும்பில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் உடன் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் தருமாறு பணிப்பாளர் கோரியுள்ளார். (1-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Ceylon Medical College Council
## External Pharmacist Examination - 2007

மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம Sat & Sunday 9am to 12 pm
புதிய அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
Sri Lanka Medical Council இல் Apprentice Pharmacist ஆக பதிவு செய்தவர்கள் இரண்டு வருடத்திற்கு பின்னர்
External Pharmacist பரீட்சை எடுக்க தகுதியுடையவர்கள் ஆவர்.

Minimum Requirement :- GCE O/L 6 Passes & GCE A/L 3 Passes (Science)
ஆரம்பம் -- 03-02-2007 **Medium :- English**

Further Details
**Director**
**Jaffna College Undergraduate Dept**
464, Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

853 நீலம்

வெற்றி இலக்கங்கள்

**18 25 31 35**
கடகம்
**30-01-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 4814892 - 4829770
ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 326,513 | 10/- | 3,265,130/- |
| 2 இலக்கங்கள் | 29,961 | 20/- | 599,220/- |
| 1 இல. + லக்கினம் | 29,652 | 30/- | 889,560/- |
| 2 இல. + லக்கினம் | 2,770 | 100/- | 277,000/- |
| 3 இலக்கங்கள் | 803 | 500/- | 401,500/- |
| 3 இல. + லக்கினம் | 69 | 5,000/- | 345,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,277,410/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 389,778 | | 7,300,910/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,729,050/-

தொடர் இல. 5701494 க்கு பெறப்பட்ட சீவப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 பெப்ரவரி 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| புத்தளம் | 4819595-7-32 |
| கொழும்பு | 4827672-1-87 |
| திருகோணமலை | 4815325-3-63 |
| களுத்துறை | 4829504-7-91 |
| மொனராகலை | 4820520-3-50 |


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திருமதி நாகலிங்கம் நாகம்மா
(புதுத்தோட்டம், தெல்லிப்பழை)

தோற்றம் 01-02-1920 மறைவு 03-01-2007

எமது குடும்பத் தலைவியின் பிரிவின் போது உடனிருந்து உதவியோருக்கும் பல விதங்களில் அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதிக்கிரியை தொடக்கம் இன்றைய நாள் வரை எம்முடன் உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். 02.02.2007 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் (மாதகல்) நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்து கொண்டு தொடர்ந்துநடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

க. சீவரத்தினம்
அருள்வாசம்.
விபுலானந்தர் வீதி, மாதகல். (57680) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### இராமசாமி சதானந்தன்
(J.P.U.M, ATTORNEY AT LAW) சிரேஷ்ட சட்டத்தரணி புலோலி தெற்கு)

இராமசாமி சதானந்தன் நேற்று (31.01.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி - சின்னம்மா தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான மகாதேவா (பூச்சியியல் நிபுணர்), உருத்திரா (நியாய துரந்துனர் ADVOCATE), பகீரதி ஆகியோரின் சகோதரனும் அன்னம்மாவின் கணவரும் புஸ்பராணி, சுந்தரேசன், காந்திமதி, சந்தி, சேகரன், சண்முகநாதன் ஆகியோரின் தந்தையும் விக்னராஜா, கனகேஸ்வரி, துஷ்யந்தன், அமிர்தா, றஜனி ஆகியோரின் மாமனும் சிவகங்கா, சிவயோகா, அர்ஷனா, சுசானா, ராகேஸ், சாருகா, மாதங்கி, சாம்பவி, பைரவி ஆகியோரின் பேரனும் விஜயராணி உருத்திரேஸ்வரனின் (சட்டத்தரணியும், பதில் நீதிவானும்) சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2007) வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு புலோலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அன்னம்மா (மனைவி),
துஷ்யந்தன் காந்திமதி (மகள் - ஆசிரியை இந்து மகளிர் கல்லூரி வெள்ளவத்தை).

உபய கதிர்காமம்,
புலோலி தெற்கு,
புலோலி.


## EXPO AIR
Your Friend in the skies..

## VACANCY
**CUSTOMER SERVICE AGENT - MALES (02)**

**YOU:**
- Are above 20 years of age and possess a pleasing personality.
- Have passed the GCE (L) level & GCE (A) level Examinations.
- Like meeting people and enjoy interacting.
- Speak fluently in Tamil & English, knowledge of Sinhala.
- Are Computer literate.
- Are willing to work long hours and a team player.

Then here's the opportunity to join our Airline which is rapidly expanding, where the sky is the limit and be a member of our dedicated team of customer service oriented personal.

**Apply within 07 days with full details and 2 non – referees to:**

**Director**
Sales & Marketing – Passenger
**EXPO AVIATION (PVT) LIMITED**
*01 E, Stanly Road, Jaffna.*


### இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம்
### மின் தடை பற்றிய அறிவித்தல்

*கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் அவசர பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு 03.02.2007ஆம் திகதி காலை 8.30மணிமுதல் மாலை 4மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.*

**2007.02.03**

கந்தரோடை, மாசியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்.

இணுவில், உடுவில், மருதனார் மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணப் பட்டணம், ஆனைக் கோட்டை, நவாலி, மானிப்பாய், பொற்பதி, சங்குவேலி.

கன்னாகம் மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பளை, பன்னாலை.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.

யாழ்.பிரதேச அலுவலகம்
சுன்னாகம்
31.01.2007.

வி.சண்முகநாதன்,
பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சாரசபை.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்குக் கைகொடுக்கும்"
இலங்கை மின்சார சபை.


## தினசரி விமானசேவை

கொழும்பு -யாழ்.
யாழ். -கொழும்பு

DAYA AVIATION நிறுவனத்தினால் நான்கு பேர் பயணிக்கக்கூடிய இரு வழிப்பாதை தினசரி சிறுவிமான சேவை உத்தரவாதத்துடன் நடத்தப்படுகின்றது.
ஒரு வழிப்பாதைக்கான கட்டணம் ரூபா 30,000/=
உடனடிப்பயணத்துக்கு தொடர்பு கொள்ளவும்.

தொ.பே.: 0114969116/ 0114542190
பக்ஸ்: 0114542360
மொபைல்: 0773846681 (சி/51950)


## கண்ணீர் மல்க ஒரு அஞ்சலி

எமது அலுவலக சக உத்தியோகத்தரும், நண்பனுமாகிய செ.ரமேஸ் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி செல்வராசா செல்வராணி

அவர்கள் 29.01.2007 அன்று அமரத்துவம் அடைந்தமையை கேள்வியுற்று நெஞ்சுருகிக் கண்ணீர் மல்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீர்வகம் தெற்கு
பிரதேச சபை,
வேலணை.

செயலாளர்,
சக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள். (57661)

## 90ஆம் நாள் நினைவலைகள்



### செல்வி நா.யசோதினி
(சுகாதாரத் தொண்டர்)

மண்ணுலகில் 02.08.1981
விண்ணுலகில் 02.11.2006

அன்பின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
அனைவரோடும் உறவாடினாயே!
செல்லும் இடமெல்லாம் புன்னகையை
விட்டுச்செல்லும் எம் செல்வமே!
ஏன் எங்களைக் கண்ணீரில் தவிக்கவிட்டு சென்றாய்
வாடா ரோஜா போல் உள்ள உன் திருமுகத்தை - இனி
நாம் எப்போது காண்போம்.

90ஆம் நாள் நினைவு வீட்டுக்கிருத்தியத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சி.நாராயணமூர்த்தி,
மின்சாரநிலைய ஒழுங்கை,
பருத்தித்துறை.

இவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர் மற்றும்
அவர் நண்பர்கள்.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி சேனாதிராசா யோகம்மா
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

வடமராட்சி, வல்வெட்டியைப் பிடமாகவும் இந்தியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சேனாதிராசா யோகம்மா 30.01.2007 இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - அன்னம் தம்பதியரின் மகளும் சேனாதிராசாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மனைவியும் மதிவதனி (இந்தியா), ரவிச்சந்திரன் (UK), ஜெயச்சந்திரன் (UK), உதயச்சந்திரன் (UK), ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெயக்குமார் (இந்தியா), புஸ்பவதனி (UK), ஜெயந்தி (UK), உதயந்தி (UK), ஆகியோரின் மாமியும் காந்தியம்மா, சின்னக்கிளி, இராஜபூபதி, அஞ்சுதமலர், இராஜகோபால், சுகீர்தமலர் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2007) இந்தியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தொ.பே: 00914426153623

இந்தியா. (57686)

### கந்தையா கிருஸ்ணசாமி

இடைக்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா கிருஸ்ணசாமி 30.01.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா - நாகம்மா தம்பதியரின் மகனும் ஆறுமுகம், தங்கம்மா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற வசீகரலிங்கம் மற்றும் தனஞ்சயன், சிறிகாந் ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் சாமித்திடல் இந்து மயானத்தில் இன்று (01.02.2007) ந.ப 12 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்பிகலட்டி, இடைக்காடு,
அச்சுவேலி.

தகவல்:
சிறிகாந் (மகன்).



### திருமதி சின்னத்துரை இரத்தினம்

கச்சேரியடியைச் சேர்ந்த சின்னத்துரை இரத்தினம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் (உத்தரவு பெற்ற கூப்பன்கடை உரிமையாளர், கன்னாதிட்டி) மனைவியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சரஸ்வதி தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற துரைசாமியின் சகோதரியும் நவரட்ணராஜா (ஓய்வுபெற்ற வைத்தியர்), சண்முகராசா (ஓய்வுபெற்ற கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர்), சிறிஸ்கந்தராஜா (ஓய்வுபெற்ற தபாலக ஊழியர்) ஆகியோரின் தாயும் நிமலலோசன் (லண்டன்), நிமாலினி (கனடா), நவ கோபன் (அமெரிக்கா), லோஜினி (லண்டன்), சுதாஜினி, காந்தரூபன், சாந்தகுமார், வசந்தரூபன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் நிலாம்பிகை, யோகராணி, புவனேஸ்வரி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2007) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212229031 (57674)

தகவல்:
நவரட்ணராஜா,
சண்முகராஜா,
சிறிஸ்கந்தராஜா (மகன்மார்).

### திருமதி பரிமளம் பரமநாதன்

காரைநகர், கருங்காலியை வசிப்பிடமாகவும் தற்போது பசறையில்வசித்துவந்த வருமாகிய திருமதி பரிமளம் பரமநாதன் நேற்று(31.01.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றபரமநாதனின் அன்பு மனைவியும் லோகேஸ்வரி, விக்கினேஸ்வரன்(கல்விப்பணிப்பாளர், வலிகாமம்), நாகரட்ணராஜா(ஓமான்), இராஜேஸ்வரன் (பசறை) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற காசிநாதன் மற்றும் தவமணி, சிவமணி, கங்காதேவிஆகியோரின் மாமியும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2007) வியாழக்கிழமை பி.ப.2 மணியளவில் நடைபெற்று, பதுளை பொதுமயானத்தில் பூதவுடல்தகனஞ்செய்யப்படும்.

அந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

335, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (57675)

தகவல்:
ப.விக்கினேஸ்வரன் (மகன்).



### திருமதி கணேசலிங்கம் சிவமணி

நல்லூர் கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசலிங்கம் சிவமணி 29.01.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசலிங்கத்தின் (உரிமையாளர் வெல்கம் சாறி கவுஸ் - கொழும்பு, ராஜி ஸ்ரோர்ஸ் -நல்லூர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சோதிடர் சுப்பிரமணியம் - நாகரத்தினம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் (அப்பாத்துரை வாத்தியார், வேலணை) - பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகளும் கலாநிதி ஜெயக்குமார் (பொறியியலாளர், லண்டன்), கலாநிதி ராஜ்குமார் (பொறியலாளர், லண்டன்), சிவாஜினி (B.A, லண்டன்) ஆகியோரின் தாயும் யசோதா (லண்டன்), ஞானமஞ்சரி(லண்டன்), ரமணன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் பரமேஸ்வரி, சண்முகநாதன்(டென்மார்க்), தனபாலசிங்கம் (நல்லைக்குமரன் ஹாட் வெயர்ஸ்), யோகேஸ்வரி(சோதிடர்), சந்திரபுஸ்பராணி, சிவதர்சினி(லண்டன்) ஆகி யோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தர்மலிங்கம், செல்வரட்ணம் (டென் மார்க்), காலஞ்சென்ற சந்திரவதனா, சூரியகுமாரன்(சுபாசென்ரர், கொக்குவில்), அருள்ராஜ் (லண்டன்), காலஞ்சென்றவர்களான இசைஅரசு சந்திரசேகரம், முருகேசம்பிள்ளை (ஆசிரியர்), சுகுணமதி மற்றும் காந்திமதி(லண்டன்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01.02.2007)வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரதுஇல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

233/5, கோயில் வீதி,
நல்லூர். (57657)

தகவல்:
யோகா சுப்பிரமணியம்
(சோதிடர் சகோதரி)



### முத்தையா பீற்றர்

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோயிலடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா பீற்றர் 29.01.2007 அகாலமரணமானார்.

அன்னார் அமுதாவின் அன்புக் கணவரும் ஷாமின் தந்தையும் கதிரன், முத்தையா, புஸ்பராணி ஆகியோரின் மகனும் கிங்சிலின்(மலேசியா),சூரியஸ், சுரேஸ் (டோகா), கௌரி, எஸ்தரின் ஆகியோரின் சகோதரனும் வினிப்பிரிடாவின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(01.02.2007) வியாழக்கிழமை முற்பகல் 11 மணி அளவில் இவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊரியான் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

300, வீடமைப்புத் திட்டம்,
நாவற்குழி (57664)

தகவல்:
சூரியஸ் (சகோதரன்)



### திருமதி சிவநாயகி சுந்தரலிங்கம்

கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் 64\, புங்கன்குளம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் சிவநாயகி 30.01.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கரம்பொன் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற குருசாமி சுந்தரம்மாவின் மகளும் மண்கும்பானைச் சேர்ந்த பொன்னுத்துரை சுந்தரலிங்கத்தின் (கிளி) மனைவியும் அமரர் பொன்னுத்துரை நாகம்மாவின் மருமகளும் தில்லைநாயகி (லண்டன்),தவநாயகி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), சோதிநாயகி, நயனி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும் லலிதசொரூபினி(லண்டன்), சொரூபன்(லண்டன்), சுகர்னியா,கபிலசொரூபன்(லண்டன்), சிவஞ்சவி, சாரங்கி (பிரான்ஸ்), சாரமன் (பிரான்ஸ்) ஆகியோரின் தாயும் கந்தசாமி (லண்டன்), அமரர் சிவபாலன், ஜெகதீசன் (பிரான்ஸ்), லட்சுமிகுணநாயகம், அமரர் துரைசிங்கம், செல்வராசா (பிரான்ஸ்), ராணி அமரசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01.02.2007)வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு 71/27, புங்கன்குளம் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

71/27,புங்கன்குளம் வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 4591275 (57663)

தகவல்: பொ.சுந்தரலிங்கம் (கணவர்), சி.தவநாயகி(சகோதரி), சு.சோதிநாயகி (சகோதரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.